මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **LAE/2024/EPS/18** **2024.10.07**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2024.10.26.
## எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல்

**வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்**

2011 ஆம் ஆண்டின் 28 இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 54(2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை உடன் அழைத்துச் செல்லத்தக்கவாறான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும் அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதே போன்று இத்தேர்தலில் அரசியல் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலைய முகவரொருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் பத்தாம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவமொன்றை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் (www.elections.gov.lk) பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக் குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய ஆள் கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதோடு அதன் பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனுமோர் அடையாள அட்டை மற்றும் இத்தகுதிச் சான்றிதழ் என்பனவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளரையும் உடனழைத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலைய பணியாட்குழுவினால் வாக்காளரின் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் என்பதோடு உடன் அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து தகுதிச் சான்றிதழ் II ஆம் பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு பணியாட்குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச் சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது என்பது வலியுறுத்தப்படுகின்றது. வாக்கு அடையாளமிடப்பட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வைத்துக் கொள்ளப்படும்.

**08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருகைதருவதற்கும் இயலாத வாக்காளரொருவருக்குத் தேவைப்படின், இதற்கு முந்திய வாக்கெடுப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடாக தனது வாக்கு சீட்டினை அடையாளமிட்டுக் கொள்ளவதற்கு அவகாசமுள்ளதென்பதும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.**

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
ரேதல்கள் ஆணையாளர் நாயகம்

(பத்தாம் அட்டவணை)

**வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கென உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின் படி (அத்தியாயம் 262 – பிரிவு 54(2)(இ) வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்**

## பகுதி I

வலிமையிழப்பிற்குள்ளான வாக்காளரின் வெளிப்படுத்துகை

1. முழுப் பெயர் : ......................................................................................................
2. தொழில் : ......................................................................................................
3. முகவரி : ......................................................................................................
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ...................................................................................
5. வலிமையிழப்பின் இயல்பு : ...............................................................................................

மேலேயுள்ள முகவரியில் வதிகின்ற ............................. ஆகிய நான் ................................ அதிகார எல்லை பிரதேசத்தினுள் பதிவு செய்யப்பட்ட வாக்காளரொருவரென்றும், மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும், சரியானவையுமெனவும் வெளிப்படுத்தப்படுவதுடன், நடைபெறவிருக்கும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க வலிமையிழப்பிற்குள்ளான ஆளொருவராக வாக்களிப்பதற்கான உரிமைச் சான்றிதழொன்றை எனக்குப் பெற்றுத் தருமாறு இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

.................................................

வாக்காளரின் கையொப்பம்/ இடதுகை பெருவிரல் அடையாளம்

திகதி: ......................   பெயர் : .......................................

மேலேயுள்ள விண்ணப்பப் பத்திரத்தில் காணப்படும் தகவல்கள் சரியானவையெனவும், என்னால் பேணப்பட்டுவரும் அறிக்கைகளுக்கிணங்க கீழ்க்காணும் தகவல்கள் சரியாகவுள்ளனவெனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

**தேருநர் இடாப்பிலுள்ளவாறு தகவல்கள்**

1. வாக்காளரின் பெயர் : .................................................
2. மாவட்டம் : ....................................
3. உள்ளூர் அதிகார சபை : ..............................................
4. வட்டார இலக்கம் மற்றும் பெயர் : ...........
5. வாக்கெடுப்பு மாவட்டம் மற்றும் எழுத்து : ........................
6. வாக்காளரின் தொடர் இலக்கம் : .............
7. வேறு ஏற்புடைய தகவல்கள் : ..............................................................................................
...............................................................................................................................

திகதி: ..............................   ....................................................

கிராம அலுவலரின் கையொப்பமும்
பதவி இலச்சினையும்

## பகுதி II

**அரசாங்க மருத்துவ அலுவலரின் சான்றிதழ்**

மேலே பெயர் காணப்படும் விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்தேன் எனவும் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுக்கிணங்க வலிமையிழப்பிற்குள்ளான ஒருவராக வாக்களிப்பதற்கு .................................. என்பவர் தகைமை * பெற்றுள்ளார்/ பெறவில்லை என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். (* தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

**வாக்காளரின் வலிமையிழப்பின் இயல்பு** : ..........................................................................................
...............................................................................................................................

திகதி :- ..................   அரசாங்க வைத்திய அலுவலரின் கையொப்பம்

பெயர் ..........................

இலச்சினை

**அலுவலக உபயோகத்திற்கு,**   (விண்ணப்பப் பத்திரத்தின் தொடர் இல: .........)

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் இந்தப் பகுதியை பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும்.

- உடனழைத்து வந்த ஆளின் பெயர் : ..........................................................................
- தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |
- வதிவிட முகவரி : ..........................................................................

வலிமையிழப்பிற்குள்ளாகியிருக்கும் மேலே I ஆம் பகுதியில் பெயர் காணப்படும் வாக்காளர் சார்பாக வாக்கை அடையாளமிடுவதற்காக வந்த நான் இந்த தேர்தலின் வேட்பாளரொருவராக/ அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராக/ வாக்கெடுப்பு நிலைய முகவரொருவராக அல்லது வாக்கெடுப்பு நிலைய பணிக்குழு அங்கத்தவரொருவராகவோ அல்லரெனவும் ஏதேனும் வலிமையிழப்பிற்குள்ளான ஆளொருவர் அல்லரெனவும் வெளிப்படுத்துகின்றேன்.

பெயர் : ..................................   ...............................................

உடன் செல்லும் ஆளின் கையொப்பம்